# பழைய ஏற்பாடு – புதிய ஏற்பாடு ஒப்பீடு

## புதிய ஏற்பாட்டிற்குரிய ஊழியம்

புதிய ஏற்பாட்டிற்குரிய ஊழியம் என்பது இந்த காலத்திற்குரிய ஊழியம். பழைய ஏற்பாட்டு காலத்தில் தேவனுடைய ஊழியம் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வந்தது. ஆனால் பழைய ஏற்பாட்டு காலத்தின் ஊழியத்திற்கும் புதிய ஏற்பாட்டு காலத்தின் ஊழியத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது மற்றும் இன்று எந்தளவுக்கு தாக்கத்தை உண்டு பண்ணியிருக்கிறது என்பதை பார்ப்போம்.

பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையே உள்ள தொடர்பு

பொதுவாக இவை இரண்டும், இரு கண்கள் போன்றவை என்று பொதுவாக சொல்வதை கேட்டு இருப்போம். இரண்டுக்கும் தொடர்பு இருக்கிறது. ஒன்றை தொடர்ந்து மற்றொன்று இருக்கிறது. அழகாக சொல்லுவார்கள், "பழைய ஏற்பாட்டிலே புதிய ஏற்பாடு மறைந்திருக்கிறது, புதிய ஏற்பாட்டிலே பழைய ஏற்பாடு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" என்று சொல்லுவார்கள். இரண்டுக்கும் தொடர்பு இருக்கிறது. அது இல்லாமல் இது இல்லை, இது இல்லாமல் அது இல்லை என்று நாம் சொல்ல முடியும். இரண்டும் மிக முக்கியமானது. ஆனாலும் பழைய ஏற்பாட்டை தாண்டி, புதிய ஏற்பாட்டிற்கு சில முக்கியத்துவங்கள் இருக்கிறது. குறிப்பாக இன்றைய காலகட்டத்திற்குரிய ஊழியங்கள் எவ்விதமாக செய்யப்பட வேண்டும், எவ்விதமான ஊழியமாக அமைய வேண்டும், இயேசு கிறிஸ்து எப்படிப்பட்ட ஊழியத்தை எதிர்பார்க்கிறார் என்றெல்லாம் அவர் கூறிய காரியங்கள் புதிய ஏற்பாட்டிலேயே சொல்லப்பட்டு, எதிர்பார்க்கப்பட்டு, ஊழியங்களும் தேவனை ஆராதிக்கின்ற ஆராதனை முறைமைகளும் அப்படியே இருக்க வேண்டும் என்று வேதாகமம் புதிய ஏற்பாட்டிலே எதிர்ப்பார்க்கிறதை நாம் பார்க்கப் போகிறோம்.

பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் ஒரு நிச்சயமான, ஒரு அருமையான தொடர்பு இருக்கிறது. பழைய ஏற்பாட்டிலே மனிதனுடைய வீழ்ச்சியை பார்க்கிறோம் புதிய ஏற்பாட்டிலே அந்த மனிதனுடைய வீழ்ச்சியிலிருந்து உண்டாகப் போகின்ற மீட்பிற்கு இயேசு சிலுவையிலே மரித்து, உயிர்ந்தெழுந்த காரியங்களை சொல்லப்பட்டிருக்கிறது.

## பழைய ஏற்பாட்டிலே வீழ்ச்சி, புதிய ஏற்பாட்டிலே மீட்பு

பழைய ஏற்பாட்டில் ஒரு சம்பவத்தின் துவக்கம் காணப்படுகிறது. புதிய ஏற்பாட்டு காலத்திலே அந்த சம்பவத்தின் நிறைவு காணப்படுகிறது. இவ்விதமாக தொடர்புள்ள புத்தகம். பாவியாகிய மனிதன் தம்மிடத்தில் திரும்ப வேண்டும். திரும்பி அந்த மனிதன் மீட்படைய வேண்டும் விசுவாசத்தினால் என்ற ஒரு காரியத்தையே பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் வலியுறுத்துகிறது. பழைய ஏற்பாட்டின் காரியங்கள், பலிகள் எல்லாமே இயேசு கிறிஸ்துவை மையப்படுத்தியே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த இயேசு கிறிஸ்துவை முற்றிலுமாய் வெளிப்படுத்துகிற காண்கிற இடத்திலே

புதிய ஏற்பாடு இருக்கிறது. இப்படியாக பலதரப்பட்ட தொடர்புகள், ஒன்றுக்கொன்று பிரிக்கமுடியாத தொடர்புகளை உடையது தான் பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும்.

ஆனாலும் அதை விட புதிய ஏற்பாட்டிலே சில மேன்மைகள் காணப்படுகிறதை நாம் சிந்திக்கும் போது, இன்றைய காலகட்டத்திற்கு இந்த புதிய ஏற்பாட்டின் ஊழியங்கள் மிக முக்கியமானவை என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். பொதுவாக அநேகர் இன்று பழைய ஏற்பாட்டு ஊழியங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். சாபங்களை கூறி மக்களை வேதனைப்படுத்தி வைக்கிறார்கள். கிருபையின் காலக்கட்டத்தில் இருக்கிற நமக்கு புதிய ஏற்பாட்டின் இந்த காலக்கட்ட ஊழியத்தை செய்யாதபடி பழைய ஏற்பாட்டின் வசனங்களை அதிகமாக மேற்கோடிட்டு காட்டி, பழைய ஏற்பாட்டின் காரியங்கள், அதை குறித்து பயம், தேவனை குறித்த ஒரு விதமான பயத்தை உருவாக்கி, மக்களை தவறான விதத்திலே ஆவிக்குரிய ரீதியில் நடத்துகின்ற அநேக சபைகள் இருக்கின்றன என்பதை நீங்களும் நானும் அறிவோம்.

ஆனால் புதிய ஏற்பாட்டின் சபையிலே கிருபையோடு கூட ஆவியின் பிரமாணத்தின் கீழ் இருக்கின்ற நாம் எவ்விதமாய் செயல்பட வேண்டும் என்று கர்த்தர் எதிர்ப்பார்க்கிறார் என்பதை கற்றுக் கொள்ளும் போது, மிகவும் விடுதலையான அதே வேளையிலே கர்த்தர் பழைய ஏற்பாட்டை விட அதிகமாய் எதிர்பார்க்கின்ற ஒரு high standard level ஐ அதாவது மிக உன்னதமான நிலையில் எதிர்பார்ப்பின்படி வாழ்கின்ற வாழ்வுக்கு புதிய ஏற்பாடு நடத்துகிறதை காண முடியும். பழைய ஏற்பாட்டின் எதிர்ப்பார்ப்பை விட புதிய ஏற்பாட்டின் எதிர்பார்ப்பு அதிகம். ஆனால் கிருபையோடு ஆசீர்வாதமான வார்த்தைகளோடு அணுகுகிற அநேக காரியங்களை புதிய ஏற்பாட்டில் பார்க்க முடிகிறது.

| பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |
|---|---|
| இது அடித்தளம் ஆகும். (Foundation) | இந்த அடித்தளத்தின் மீது தேவனுடைய புதிய வெளிப்படுத்துதல் காரணமாக கட்டப்பட்டிருக்கிற புதிய கட்டிடம் என்று சொல்லலாம். |
| அநேக ஆவிக்குரிய காரியங்கள் இரகசியமாக சொல்லப்படுகிறது. | இரகசியங்கள் வெளிப்படுத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளது. |
| அநேக தீர்க்கதரிசனங்கள் கூறப்பட்டுள்ளன. (பெரிய தீர்க்கதரிசன புத்தகங்கள், சிறிய தீர்க்கதரிசனங்கள்) நடந்தவைகள், இனி நடக்க போகிறவைகள் ஆகியவை கூறப்பட்டுள்ளன. | அநேக தீர்க்கதரிசனங்கள் நிறைவேறினதை சொல்லப்பட்டுள்ளன. (பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட தீர்க்கதரிசனங்கள் புதிய ஏற்பாட்டில் நிறைவேறின) |
| இஸ்ரவேல் மக்களை மையப்படுத்தி பேசப்பட்டுள்ளது. (வாழ்க்கை வரலாறு, சுற்றியுள்ள காரியங்கள்) | கிறிஸ்துவை மையப்படுத்தி கூறப்பட்டுள்ளது. (வாழ்வு, அவர் கூறிய உபதேசங்கள், நிருபங்கள்) |
| தேவனுடைய கோபத்தை பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. | பாவிக்கு தேவன் அளிக்கிற கிருபையை பற்றி அதிகம் சொல்லப்பட்டிருக்கிறது. |

| | |
|---|---|
| (நியாயத்தீர்ப்பை பற்றி) | (மீட்பை பற்றி) |
| மேசியா வாக்களிக்கப்படுகிறார் (ஏசாயா 53) | மேசியா யார் என்பதை வெளிப்படுத்தி சொல்லப்பட்டிருக்கிறது. யோவான் 4:25-26 |
| நியாய பிரமாணம் எழுதப்பட்டது | இயேசுவாகிய மேசியா நியாயபிரமாணத்தை எவ்வாறு நிறைவேற்றி முடித்தார் என்பதை சொல்லப்பட்டுள்ளது. (மத்தேயு 5:17, எபிரெயர் 10:9) |
| தேவன் தாமே தெரிந்துக்கொண்ட இஸ்ரவேல் ஜனங்களோடு தேவன் செயல்பட்டதை முக்கியமாக சொல்லப்பட்டிருக்கிறது. | சபையோடு எவ்விதமாய் செயல்பட்டார் என்பதை பார்க்க முடிகிறது. |
| உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களை பற்றி சொல்லப்பட்டுள்ளது. உபாகமம் 29:1 | ஆவிக்குரிய எல்லா ஆசீர்வாதங்களும் கொடுக்கப்பட்டுள்ளது என சொல்லப்பட்டுள்ளது. (எபே 1) |
| தெளிவுப்பட கூறப்படாமல் அநேக சத்தியங்கள் உள்ளன. (உதாரணம் - முதலாம் வருகை, இரண்டாம் வருகை பற்றி) | தெளிவுப்படுத்தப்பட்டன. (இயேசு மரித்து உயிர்த்தெழுவார் என்பதையும், இரண்டாம் வருகையில் அவர் இராஜாவாக வருவார் என்பதை பற்றி) |
| சில உபதேசங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (நிழலாட்டமாக) | அநேக உபதேசங்கள் மிகவும் தெளிவுப்பட கூறப்பட்டுள்ளது (பங்கு பங்காக உபதேசங்கள் அதிகமாக) எ.கா: எபிரெயரில் இயேசு உண்மையான ஆசாரியத்துவம் பற்றி அதிகமாக கூறப்பட்டிருக்கிறது, முந்தைய பலிகளை மாற்றி போட்டது. |
| நியாய பிரமாணத்தை கொடுத்தது. | நியாய பிரமாணத்தின் அர்த்தத்தையும் இரட்சிப்பின் அவசியத்தையும் விளக்குகிறது. |
| பரதேசியாக இழந்து போன நிலையில் ஆதாம் இருக்கின்றான். | இரண்டாம் ஆதாமால் எவ்வாறு இழந்து போன பரதேசி திருப்பபெறப்பட்டது என்பதை பார்க்கலாம். |
| மேசியாவின் வாழ்வு முன் அறிவிக்கப்பட்டிருக்கிறது | சுவிசேஷ புத்தகங்களில் இயேசுகிறிஸ்துவின் வாழ்வும், நிருபங்களில் அவருடைய வாழ்விற்கு நாம் எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்பது பற்றியும் சொல்லப்பட்டுள்ளது. |

புதிய ஏற்பாடு பரிபூரணமான இயேசுவை பற்றியும், பரிபூரணமான வேத வெளிப்பாட்டையும் உடையது. பழைய ஏற்பாடு பெலவீனமுள்ள மனிதர்களையும் அந்த வெளிப்படை குறிக்கிறது. பரிசுத்த ஆவியின் வல்லமையோடு வாழும் நாம் பழைய ஏற்பாட்டு பக்தர்களைவிட நாம் மேன்மையான பொருந்தியவர்கள். வித்தியாசமானவர்கள். அதை தான் பவுல் 2 கொரிந்தியர் 3:8-11ல் ஒழிந்து போகிற

மகிமையுடைய அந்த ஊழியம் மகிமையுடையதாய் இருந்தால் ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுடையதாய் இருக்கும். ஆக்கினை தீர்ப்புடைய ஊழியம் மகிமையுடையதாய் இருந்தால் நீதியை கொடுக்கும் ஊழியம் அதிக மகிமை உடையதாய் இருக்குமே. இப்படியாக மகிமைப்பட்டிருந்த அந்த ஊழியம் இந்த ஊழியத்திற்கு உண்டாயிருக்கிற சிறந்த மகிமைக்கு முன்பதாக மகிமைப்பட்டது அல்ல. அன்றியும் ஒழிந்து போகிறதே மகிமை உடையதாய் இருந்ததேயானால், நிலைத்திருப்பது அதிக மகிமையுடையதாய் இருக்குமே என்று பவுல் எழுதியிருக்கிறதை வாசிக்கின்றோம்.

இங்கே பழைய ஏற்பாடு ஊழியத்திற்கும் புதிய ஏற்பாட்டு ஊழியத்திற்கும் பவுல் அழகாக வித்தியாசத்தை ஏற்படுத்தி கூறுகிறார். புது உடன்படிக்கையின் ஊழியம் என்று சொல்லுகிறார். அதாவது, மோசேயின் நியாயபிரமாண ஊழியத்திற்கும் மகிமையான ஆவிக்குரிய ஊழியத்திற்கும் பவுல் வித்தியாசப்படுத்தி எழுதுகிறார். ஆவிக்குரிய ஊழியம் அதிக மகிமையுடையது என்று வாசிக்க முடியும். மகிமையுள்ள ஊழியம், நிலைத்திருக்கின்ற ஊழியம், சிறந்த மகிமையுடைய ஊழியம், நீதியை கொடுக்கிற ஊழியம் என்று பல பெயர்கள் 2 கொரிந்தியர் 3:8-11 வரை பார்க்கலாம்.

பழைய ஏற்பாட்டு ஊழியத்திற்கும் புதிய ஏற்பாட்டு ஊழியத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. அதைவிட மகிமை பொருந்தியது இன்றைய காலத்தில் நாம் செய்கிற ஊழியம்.

மோசேயினுடைய நியாயப்பிராமனம் எந்தளவுக்கு புதிய ஏற்பாட்டில் மதிக்கப்படுகிறது? இல்லாவிட்டால் புதிய ஏற்பாட்டின் காலத்தில் இருக்கிற நாம் மோசேயினுடைய நியாயப்பிரமாணத்திற்கு எந்தளவுக்கு கீழ்பட்டவர்கள்? அதற்கு அப்படியே கீழ்படிய வேண்டுமா? பத்து கட்டளைகளை இன்று கைக்கொண்டு கீழ்ப்படிய வேண்டுமா? அதனுடைய அர்த்தம் என்ன என்று கொஞ்சம் சிந்தித்தோமானால் மோசேயினுடைய நியாயப்பிரமாணத்திற்கு இன்றைய புதிய ஏற்பாட்டு காலத்தில் கொடுக்க வேண்டிய இடத்தை நாம் புரிந்துக் கொள்ள முடியும்.

பவுல் தன்னுடைய நிருபங்களில், நாம் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்பட்டவர்கள் அல்ல என்று சொல்லப்பட்டிருக்கிறதை கலாத்தியர் 5:4ல் பார்க்கின்றோம்.

மோசே நியாயப்பிரமாணத்திற்கு நாம் கீழ்படிய வேண்டுமா?

நம்முடைய இரட்சகரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்து நியாயபிரமாணத்தை முழுமையாக நிறைவேற்றி முடித்துவிட்டதினாலே, நாம் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்படிய வேண்டியதில்லை.

ஏன் நாம் கீழ்படிய வேண்டியதில்லை?

நியாயப் பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள். கலாத்தியர் 5:4

- ❖ நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் ஒருவரும் நீதிமானாக முடியாது. ஆனால் கிருபையினால் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் நீதிமான்களாகிறோம்.
- ❖ கிறிஸ்து இயேசுவின் மூலமாக இரட்சிப்பின் அனுபவத்தை பெற்று தேவனுடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற நம்முடைய இருதயங்களிலேயே ஆவியின் பிரமாணம் எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, கட்டாயத்தினால் அல்ல, கடினமான மனநிலையோடு அல்ல, மகிழ்ச்சியோடும் கிறிஸ்து நம்மிடத்தில் வெளிப்படுத்தியிருக்கிற தேவனுடைய மேலான அன்பை புரிந்து கொண்டு நாமும் தேவனிடத்தில் அன்பு செலுத்துகிறவர்களாய் நேசத்துடனே ஆவிக்குரிய ஜீவியம் செய்கிறோம்.

**கிருபையின் காலம்**

நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த காலம் கிருபையின் காலம். எப்படியெனில் கிருபையின் பரிபூரணமாகிய கிறிஸ்து இயேசு நமக்காக உலகில் வந்து, சிலுவையில் இரத்தம் சிந்தி, ஜீவன் தந்து, நித்திய மீட்பை நமக்கு ஏற்படுத்தி தந்ததினாலே இது உண்டாயிற்று.

‘‘ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும், வெறுத்து, தெளிந்த புத்தியும், நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.

- ❖ இரட்சிக்கப்பட்ட நம்முடைய வாழ்வில் தேவனுடைய கிருபையானது பிரிக்க முடியாத நிலையில் உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.
- ❖ நாம் தேவனுடைய வல்லமையின் கிருபையினாலும் பரிசுத்த ஆவியானவரின் விடுதலையோடும் ஆசீர்வாதமான ஆவிக்குரிய ஜீவியம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை எண்ணி கர்த்தரை துதிக்க வேண்டும்.

‘‘கிறிஸ்து இயேசுவுக்குப் பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின் படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.’’

கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. அதெப்படியெனில் மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாக, பாவத்தைப் போக்கும் பலியாக வந்ததினால் உண்டாயிருக்கிறது. நாம் மாம்சத்தின்படி

நடவாமல், ஆவியின்படி நடக்கிறவர்களாய் இருப்போமானால் நியாயப்பிரமாணத்தின் நீதி நம்மிடத்தில் நிறைவேறக்கூடிய நிலையில் இருக்கின்றோம் என்பதை அறிந்து கொள்ளலாம்.

**பவுலின் வைராக்கியம்**

கிறிஸ்துவினால் உண்டான ஆவியின் பிரமாணம் நமக்கு விடுதலையான, சுயாதீனமுள்ள வாழ்வை கொடுத்திருக்கிறது. ஆனால் ஆவியின் பிரமாணத்திற்கு விரோதமாக செயல்பட்டு நியாயப்பிரமாணத்தின் கிரியைகளையே முக்கியப்படுத்த வேண்டுமென்று வைராக்கியமாக பிரயாசப்படுகிறவர்கள் அன்றுமுதல் இன்றுவரைக்கும் இருக்கிறதை நாம் பார்க்கிறோம்.

நியாயப்பிரமாணத்தை நன்கு கற்றுத்தேர்ந்து நியாயப்பிரமாணத்திற்காக வைராக்கியம் பாராட்டிய சவுல் இயேசுவால் சந்திக்கப்பட்டு, கிறிஸ்துவினால் ஆவியின் பிரமாணத்திற்குரியாக இரகசியங்களின் வெளிப்பாடுகளை பெற்று, நாம் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்படிய வேண்டியதில்லையென்றும், கிறிஸ்துவுக்குள் நமக்கு மேன்மையான ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் நிறைந்த வாழ்வு இருக்கிறதென்றும் பல நிருபங்களை எழுதி சபைகளுக்கு வைராக்கியமாக உபதேசிக்கிறதைப் பார்க்கிறோம். உதாரணத்திற்காக கீழே குறிப்பிடுகிற வேத பகுதிகளை வாசித்து நன்கு அறிந்து கொள்ளுங்கள். அப்போஸ்தலருடைய நடபடிக்கைகள் 15ம் அதிகாரம், ரோமர் 5:10, 6:14, 7:1, 2 கொரிந்தியர் 3:6-18, கலாத்தியர் நிருபம் முழுவதும்.

புதிய ஏற்பாட்டின் ஊழியத்தை தான் நாம் செய்கின்றோமா?

இன்றைய காலங்களில் காணப்படுகிற அநேக திருச்சபைகளில் மாம்சத்தின் கிரியைகளையே அதிகமாக முக்கியப்படுத்தி, இதைச் செய், அதைச் செய்யாதே என்றும், இதை செய்யாவிட்டால் அல்லது அதைச் செய்தால் தேவன் உன்னைத் தண்டிப்பார். உனக்கு ஆக்கினை வரும். தீங்கு நேரிடும் என்று ஆக்கினைத் தீர்ப்பைக் கூறுகிற மற்றும் ஜனங்களை பயமுறுத்தி சரியான வழிக்கு கொண்டுவர வேண்டும் என்கிற நிலையிலேயே ஊழியங்கள் நடைபெறுகிறதை பார்க்கிறோம். இது புதிய ஏற்பாட்டு ஊழியம் அல்ல.

புதிய ஏற்பாட்டு ஊழியம் என்றால் என்ன?

தேவன் நீதியுள்ளவர், அதனால் பாவத்திற்கான தண்டனை கொடுத்து நீதி செய்ய வேண்டியது அவசியம். மறுபுறம் தேவன் அன்புள்ளவராய் நமக்கான மீட்பு மற்றும் இம்மையிலும் மறுமையிலும் நம்முடைய வாழ்விற்கான ஆசீர்வாதங்களை கிறிஸ்துவின் மூலம் ஏற்படுத்தியிருக்கிறதை கூறுகிறதே புதிய ஏற்பாட்டு ஊழியம்.

திருமண வாழ்வில் இணைக்கப்படுகிற கணவனுக்கும் மனைவிக்கும் இடையே குடும்ப வாழ்வில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே ஒரேவிதமான கருத்துகள் இல்லாததினாலே வாழ்வே இல்லை என்றாகிவிடாது, மாறாக ஒருவரை

ஒருவர் புரிந்து கொண்டு, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்கின்றபோது மகிழ்ச்சியான ஜெயமுள்ள வாழ்வு வாழலாம் என்பது எவ்வளவு உண்மையோ, அந்த அளவுக்கு திருச்சபையிலும் உபதேசங்களில் தெளிவில்லாமல், எப்பொழுதும் போல பரம்பரியமாக செய்யப்படுகிறது புதிய ஏற்பாட்டு ஊழியம் அல்ல. கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டது போல ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொண்டு, ஒருவர் மேல் ஒருவர் அன்பு செலுத்தி, இப்படியே கிறிஸ்துவினுடைய ஆவியின் பிரமாணத்தை நிறைவேற்றுகிறதே புதிய ஏற்பாட்டு ஊழியம் ஆகும்.

கேள்விகள்

1. பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையேயுள்ள தொடர்பைப் பற்றியும், பழைய ஏற்பாட்டை விட புதிய ஏற்பாடு எவ்விதங்களில் விசேஷமானது என்பதைப் பற்றியும் நீங்கள் இப்பாடத்தின் வழியாக கற்றுக்கொண்டதிலிருந்து எழுதுக?
2. மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு நாம் கீழ்படிய வேண்டியதில்லை என்பதை நிரூபிக்க அப்போஸ்தலனாகிய பவுல் கூறியுள்ள காரியங்களை வசனங்களோடு கூறுக?